27228
(18924)

# இதென்ன சுயராஜ்யம்?

195123

★

தீரேந்திர மஜும்தார்
மொழிபெயர்த்தவர்: G. சுப்ரமண்யம்

★

ஸர்வோதய பிரசுராலயம்
(அகில பாரத சர்க்கா சங்கம்)
வீரபாண்டி :: திருப்பூர்

விலை அணா 3

சிறு பிரசுரம் 6

## முகவுரை

அரசியல் சுதந்திரம் கிடைத்தும் இன்னும் உண்மையான சுயராஜ்யத்தைக் காண முடியவில்லை. நாம் விரும்பிய சுயராஜ்யம் இது அல்லவே என்று கிராம மக்கள் ஏங்கி நிற்கிறார்கள்.

இப்பொழுதுள்ள சுதந்திரத்தில் என்ன குறை? இதைத் தீர்த்து சுதந்திரத்தைப் பூரணமாக்குவதற்கு காந்திஜி காட்டிய வழியில் மக்கள் தீர்க்கமாக ஆராய்ந்து, அவ்வழியைப் பின்பற்றுவதைத் தவிர வேறில்லை.

இம்மாதிரியான முக்கியமான விஷயங்களை சர்க்கா சங்க அக்கிராசனர் ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார் சென்ற சில வருஷங்களாக விளக்கிவருகிறார். தமிழ் அன்பர்களுக்காக அவருடைய ஹிந்தி உபந்நியாசத்தின் சுருக்கத்தை இந்தச் சிறு பிரசுரமாக வெளியிடுகிறோம்.

இத்துடன், ஸ்ரீ. மஜூம்தாரின் "சுயராஜ்யத்தின் உண்மைப் போர்" என்ற தலைப்பில் இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ள சிறு பிரசுரத்தையும் படித்துப் பயன்பெறும்படி அன்பர்களை வேண்டுகிறோம்.

நவம்பர் '51 பிரசுரித்தோர்.

18924

K.S

# தென்ன சுயராஜ்யம்?

மூன்று ஆண்டுகளுக்கு முன் வெள்ளையர் வெளியேறினபோது மக்களிடம் ஒரே குதூகலம்! எங்கெங்கும் கொண்டாட்டம்! இதனிடையில், மகாத்மா காந்திஜியும் நம்மை விட்டுப் பிரிந்தார். நாடெங்கும் ஒரே துயரம். தற்போதோ, கிராமங்களில் ஒரே கலக்கம்; பல்லாண்டுகளாக எதிர்பார்த்த சுயராஜ்யம் வந்தும் நன்மையில்லை, கஷ்டம் தீரவில்லை. சமூகத்தில் விவசாயிகளும், ஜமீன்தார்களும், தொழிலாளரும், அறிவாளிகளும் தாம் வீட்டிலிருந்தவாறே இருக்க சகல வசதிகளும் தாமாக வந்து சேரும் என்று கனவு கண்டார்கள்; அவ்வாறு ஒன்றும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக, தற்போது நாட்டின் ஜீவாதாரத் தேவைப் பொருள்கள்கூடக் கிடைப்பதில்லை. ஆனால் ஒன்று மட்டும் மலிந்துவிட்டது எனலாம்; ஏழை மக்கள் தங்கள் அவதியைச் சொன்னால் அவர்களை மிரட்டுவது சகஜமாகி விட்டது. பணம் படைத்த சில கிராமவாசிகள் லஞ்சம் வழங்கி இம்மிரட்டலைக் கொஞ்சம் சாந்தப்படுத்த முடிந்தபோதிலும், பெருவாரியான மக்களுக்கு ஜீவாதாரத் தேவைப் பொருள்களுக்குப் பதிலாக இம்மிரட்டலும் உருட்டலுந் தான் கிடைத்து வருகிறது.

இந்த சுயராஜ்யம் நமக்குக் கிடைக்காமல் இருந்தாலே நலம் போலும்!

அன்னியர் ஆட்சியில் அதிக நன்மை இருந்ததே, சுயராஜ்யத்தில் ஏன் இந்தக் கஷ்டம்? இதைப்பற்றி தீவிரமாக நாம் சிந்தனை செய்யவேண்டும். சிந்தனையோடு கூடவே, பிறரைக் குறைகூறாமல், நாட்டின் நன்மைக்கான வழி முறைகளைக் கண்டு பிடித்து அவ்வழி நடக்க வேண்டும். மனச்சோர்வால் இக்காரியம் கைகூடாது. நம் குடும்ப விவகாரங்களிலேயே சதாகாலமும் ஈடுபட்டிருந்தால், நாட்டின் நிலைமையை அறிய அவகாசமும்

ஆற்றலும் அறிவும் ஏற்பட வேண்டாமா? எனவே, இது என்ன சுயராஜ்யம், எப்படி நமக்குக் கிடைத்ததென்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியா மிகப் பெரிய நாடு. பல கோடி ஏக்கர் சொத்துள்ளது இது. பெரியதோ, சிறியதோ, சொத்து என்பதெல்லாம் ஒரே மாதிரி தான். பெரிய சொத்தைப் பற்றிய கொடுக்கல் வாங்கல், சண்டை சச்சரவு, நிர்வாக ஏற்பாடு முதலியவை அனைத்தும் ஒரு சிறிய சொத்தைப் பற்றியது போலத்தான் இருக்கும். உங்கள் கிராமத்தில் நீங்கள் பத்து, இருபது, ஐம்பது, நூறு ஏக்கர் சொத்துள்ளவராக இருக்கலாம். உங்கள் சொத்தை யாராவது கைவசப்படுத்தினால், முதலில் பேச்சுவார்த்தையின் மூலம் உங்கள் சொத்தை விட்டுவிடும்படிக் கேட்பீர்கள். இல்லையென்றால், கச்சேரியில் தாவா; வக்கீல்கள்—சாட்சிகள்; சின்ன கோர்ட்டு, பெரிய கோர்ட்டு என்று வழக்காடினால் தான் உங்கள் பக்கம் தீர்ப்புக் கிடைக்கும். இந்தத் தீர்ப்பு கிடைப்பதற்குள் ஒருக்கால் நீங்களே அழிந்து விடக்கூடும்! "நம் சொத்தெல்லாம் நாசமடைந்த இதென்ன தீர்ப்பு வேண்டியிருக்கிறது? நம் எதிரியிடமே சொத்தை விட்டுவிட்டு வழக்காடாமல் இருந்திருக்கலாமே. இந்தத் தீர்ப்பு நமக்கு வேண்டாம்" என்று யாராவது சொல்வார்களா? மாட்டார்கள். தமக்குச் சாதகமான தீர்ப்பைப்பற்றி சந்தோஷமடைந்து, கிடைக்கும் பங்கில் கஷ்டப்பட்டு உழைத்து, முன் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைப் போக்கி முன்னைவிட சுகமாக இருக்கவேண்டுமென்றுதான் விரும்புவோம்.

அதேபோல் இந்நாட்டில் உழுது பயிரிட்டு, உழைத்து, செல்வங்களைச் சேகரிக்கும் நீங்களே இந்நாட்டின் சொத்திற்கு எஜமானர். செல்வத்தை உற்பத்தி செய்பவனே அதற்குச் சொந்தக்காரன். இந்நாட்டுச் செல்வம் உங்களால் பெருகிவரும்போது வேறு யார்தான் அதன் சொந்தக்காரராக முடியும்? உங்கள் இந்தப் பெரிய சொத்தை வெள்ளையர் கைவசப்படுத்தி அதிக லாபம்

அடைந்ததோடு, உங்களையும் உறிஞ்சிவிட்டார்கள். இதனிடையே காந்திஜி வந்து தட்டியெழுப்பினர். உங்கள் சொத்திற்காக வெள்ளையரிடம் வழக்காட முன்வந்தீர்கள். மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நேரு, மற்றும் பல காங்கிரஸ் தலைவர்கள் உங்கள் வழக்கில் வக்கீல்களாயினர். உங்கள் கிராம மக்களில் சிலரும் இவ்வழக்கில் கூட இருந்து உதவினீர்கள். அதன் பயனாக பிரிட்டிஷ் பார்லிமெண்டில் உங்கள் பக்கம் தீர்ப்புக் கிடைத்தது. ஆனால் வெகு காலமாக வழக்காடினதால் நம் நாடு நாசமாகிவிட்டது. தீர்ப்புக் கிடைத்தபோது நம் நிலைமை, இவ்வழக்காட ஆரம்பித்தபோது இருந்ததைவிட மோசமாயிற்று. இதில் கவலைப்படவேண்டிய புதிய விஷயம் என்ன? கச்சேரிகளில் தீர்ப்பு வாங்குபவனின் நிலைமை எப்பொழுதும் இப்படித்தான். அவனுக்குச் சொத்துரிமை ஏற்படுகிறது; ஆனால் நிலைமை மோசமாகிறது. சுயராஜ்யத் தீர்ப்பு அடைந்து நம் நாட்டின் சொத்துரிமை நமக்குக் கிட்டியது. இந்நிலை மோசமாக இருக்கிறது. இதைப் பற்றிக் கவலைப்படுவானேன்? வழக்கில் ஜெயித்தவனைப் போல், சந்தோஷத்துடன், கிடைத்த சொத்தில் தீவிரமாக உழைத்து, செல்வத்தைப் பெருக்கி சுகமாக வாழத் திட்டமிடவேண்டியதுதான்; எனவே இன்று நமது பொறுப்பு என்ன, கடமை என்ன என்பதைச் சிந்திப்போம்.

தீர்ப்பு நகல் காகிதத்தில் இருப்பதாலேயே சொத்தில் உரிமை ஏற்படுவதில்லை. சொத்தை சுவாதீனப்படுத்த மேலும் போரிடவேண்டும். தீர்ப்புக் கிடைக்க நாம் நியமித்த வக்கீலோ, சாட்சியோ நமக்கு சுவாதீனம் செய்து கொடுப்பதில்லை. இதற்கு வீட்டு மனிதர், அக்கம் பக்கத்திலுள்ளவர், பங்காளி, கூட்டாளி அனைவரையும் திரட்ட வேண்டும். அதேபோல், சுயராஜ்யத் தீர்ப்பின்படி நாட்டை சுவாதீனப்படுத்த முற்படவேண்டும். உங்கள் சார்பில் வக்காலத்து வாங்கின காங்கிரஸ்காரர்களே முழு சுவாதீனமும் செய்துதர வேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஒன்றிரண்டு ஏக்கர் நிலத்தைக்கூட

இம்முறையில் சுவாதீனப்படுத்துவதில்லை என்ருல், இவ்வளவு பெரிய நாட்டின் சொத்தை எப்படி சுவாதீனப்படுத்துவது? கிராமத்திற்குக் கிடைத்த சுயராஜ்யத்தை சுவாதீனப்படுத்திச் சுகமடைய விரும்பினுல் ஒவ்வொரு கிராமவாசியும் இதில் ஈடுபட வேண்டும். "எனக்கு ஓய்வில்லை, என் வயல் காய்கிறது, பெண்ணுக்குப் பிள்ளை தேட வேண்டும்" என்று சொல்வீர்களேயானல் ஆங்கிலேயர் விட்டுப்போன இந்த சொத்து உங்களுக்குக் கிடைக்காது; வேறு யாராவதுதான் இதை அனுபவிப்பார்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் "மக்கள் ஆட்சி, விவசாயி—தொழிலாளி ஆட்சி" என்றே இதுவரை சொல்லிவந்தார்கள். உங்கள் சார்பிலேதான் வழக்காடினர். உங்கள் பெயருக்களித்த தீர்ப்பு நகல் நேருஜியிடம் இருக்கிறது. எனவே இதை சுவாதீனப்படுத்த நீங்கள்தான் முன்வர வேண்டும். நாங்களே சுவாதீனப்படுத்த வேண்டுமென்ருல் பின்னர் உங்கள் சுவாதீனத்திற்கு அது எப்படி வரும்? கிராமங்களில் பார்த்தால், பலபேருக்குத் தீர்ப்புக் கிடைத்தும் சொத்து சுவாதீனமாகாமல் இருப்பது தெரியும். சில வேளை முதலில் சுவாதீனமுடையவன் எந்த விதத்திலும் விட்டுக்கொடுப்பதில்லை; அல்லது, சில பலசாலிகள், நம் உற்ருர் உறவினர் ஆகி, எப்படியாவது அதை சுவாதீனப்படுத்தித் தம் அதிகாரத்தில் வைத்துக் கொள்கிருர்கள். நாம் சொத்தினிடம் வந்தால் நம்மையே விரட்டுவார்கள். அல்லது, நம் வக்கீல்களே தம் ஊதியத்திற்காக நம் சொத்தை அபகரிப்பதும் உண்டு.

இவை அனைத்தும் சுயராஜ்ய சுவாதீனத்திலும் ஏற்படலாம். வெளிநாட்டார் ஏதாவது வழியில் வந்து தம் சுவாதீனத்தை நிலைநாட்டலாம்; நாட்டின் பெரிய மனிதர்கள், முதலாளிகள், உங்கள் நண்பர் என்ற முறையில் நாட்டை சுவாதீனப்படுத்திக் கொள்ளலாம்; அல்லது, இதுவரை உங்கள் சார்பில் வழக்காடித் தீர்ப்பு வாங்கின வக்கீல் என்ற முறையில் காங்கிரஸ்காரர்கள்

 (18924)

தங்கள் ஊதியத்திற்காக சொத்து முழுதையும் எடுத்துக் கொள்ளலாம். இவை அனைத்தையும் எதிர்த்து நீங்கள் போராடவேண்டும். இப்போராட்டத்தில், பிறரை நம்பி யிருத்தல் கூடாது; தன் கையே தனக்குதவி என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் வாளாவிருந்தால் எவ்வகையில் அபாயம் ஏற்படலா மென்பதைக் கவனிப்போம்.

முதலில் வெள்ளையரின் அபாயம். அவர்கள், மகா புத்திசாலிகள்; உலகை ஏமாற்றியே முன்னேறியவர்கள். இந்தியாவை ஆள வரவில்லை; இங்கு வியாபாரம் செய்ய வந்தவர்கள். வியாபாரிக்குத் தன் லாபமே குறி; பெருமை சிறுமை என்பதெல்லாம் இல்லை. பணம் என் ருல் தலையையும் பிடிப்பார்கள், காலையும் பிடிப்பார்கள். ஆட்சியைக் கைவசப்படுத்தி, அந்த செல்வாக்கில் நாட்டின் செல்வத்தைக் கொள்ளையடிக்கலா மென்றே இங்கு வந்த வர்கள். அதே மாதிரி தங்கள் மூலதனத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

காந்தியடிகளின் சொற்படி நீங்கள் இயக்கம் தொடங்கி பகிஷ்காரம்—மறியல் நடத்தியதால், அவர்களின் வியாபாரம் வீழ்ந்தது. 1942 இயக்கம் நடந்தது. இனி ஆட்சியின் செல்வாக்கால் நாட்டைச் சுரண்டுவது முடி யாது என்பதோடு, ஆட்சி செய்வதே கஷ்டம் என்று புரிந்துகொண்டனர். எனவே, ஆட்சிப்பீடத்தை விட்டு வேறு வழி தேடுகிருர்கள். மக்கள் விழிப்படைந்ததால் கொடுமை செய்து சுரண்டமுடியாத ஜமீன்தார், மக்களை வசப்படுத்த, வட்டிக்குக் கடன் கொடுத்து உறிஞ்சுவது போன்ற ஒரு வழி உண்டு. இன்றைய உலகில் பிற நாட்டின் அதிகார பூர்வமான ஆதிக்கம் என்ற முறை மறைந்துவிட்டது. ஏனெனில், இதில் அதிக லாபமில்லை. முற்காலத்தில் அதிகார ஆதிக்கம் உள்ள நாடு பெரிய நாடென்று கருதப்பட்டது. பிரிட்டிஷ் தீவுகள் சிறியவை யாக இருந்தாலும், பிரிட்டனின் அதிகாரத்தில் 'உலகின் பெரும்பாகம் இருந்ததால் அது வல்லரசு நாடாகக்

கருதப்பட்டது. ஆனல் இன்று, எந்த நாட்டில் எவ்வளவு செல்வாக்கு ஏற்படுத்தலாமென்றே பார்க்கிறார்கள். அமெரிக்காவும் ரஷ்யாவும் இம்முறையைத்தான் கையாளு கின்றன.

எனவே, அந்நியர் ஆட்சியிலிருந்து தப்பி மற்றவர் களின் செல்வாக்குக்கு அடிமையாகாத வண்ணம் பார்த் துக்கொள்ள வேண்டும். ஆட்சிக்கு அடிமையாயிருத் தலும் செல்வாக்குக்கு அடிமையாயிருத்தலும் இரண்டும் ஒன்றுதான். ஒன்றில் உங்கள் தலையில் துப்பாக்கிக் குறி வைத்தால், மற்றதில் நீங்கள் தலைதூக்க முடியாத பளுவைச் சுமத்துவார்கள்; இதுதான் வித்தியாசம்.

இச்சுமை எத்தகையதென்று பார்ப்போம். வெள் ளையர் வெளியேறினபோது நம் நாட்டைப் பாழாக்கி விட்டுச் சென்றனர். இது இயற்கையே. உங்களிட முள்ள நிலம் கைமாறுகிறது என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நிலத்தை மோசமாக்கி விடுவீர்கள். குத் தகை நிலம் உங்களுக்கில்லை என்றால், நிலத்தின் வளத் தையே அழித்துவிடுவீர்கள். நகரங்களில் அவ்வளவு நிலம் இல்லை. யாராவது குடித்தனம் செய்யும் வீட்டைக் காலி செய்தால், ஒன்றும் செய்ய முடியவில்லை யானாலும் வீட்டில் அடுப்பையாவது இடித்துவிட்டுப் போவது சகஜம். இதே முறையில் ஆங்கிலேயரும் நம் நாட்டைப் பழுதாக்கினர். ஜீவாதாரத் தேவைப் பொருள்களுக்கு வகையில்லை. எங்கு போனாலும் ஒரே குறை. "சுய ராஜ்யம் கிட்டியும் உணவு இல்லையே, துணி இல்லையே" என்கிறீர்கள். உணவு உற்பத்தி செய்ய வெளிநாட்டு உரம் உங்களுக்குத் தேவை. உங்கள் தேவைக்கு வேண் டியதைக் கொடுப்பார் யார்?" பெரிய ஆசைகாட்டி, ஓட்டு வாங்கி, ஆட்சிப்பீடத்தில் இருக்கிறீர்களே! நேருஜி போன்ற பல காங்கிரஸ் தலைவர்களை நாற்காலி தேய்வதற் காகவா அங்கே அனுப்பினோம்? உணவு, உடை முதலிய சகல வசதிகளும் செய்யத்தானே தேர்ந்தெடுத்தோம்!" என்கிறீர்கள். டில்லியிலும்சென்னையிலும் உள்ள சர்க்காரே

உங்கள் தேவை யனைத்தையும் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால் அதன் பலன் என்னவாகும் தெரியுமா? உடையை மட்டும் எடுத்துக்கொள்வோம். நேருஜி தனியாக நூல்நூற்று உங்களுக்குத் துணி தரவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள்! இக்கலியுகத்தில், கிருஷ்ணனிடம் யாசித்துத் துணியை, பேல்பேலாகக் கொடுத்துதவக்கூடிய திரௌபதி அவர் வீட்டில் இல்லை. துணி வேண்டுமானால் இரண்டே வழிகளில்தான் கிடைக்கக்கூடும். ஒன்று, வீடுதோறும் ராட்டையில் நூல் நூற்பது. மற்றது, பம்பாய், கல்கத்தா, கான்பூர் முதலிய நகரங்களில் பஞ்சாலை ஏற்படுத்துவது.

நம்மவரின் நிலை வியப்பானது. வெள்ளையர் வெளியேறியும், நாம் காந்திஜியைப் பரிபூரணமாக ஏற்கவில்லை; சித்தத்தில் காந்திஜியும் சிந்தனையில் வெள்ளையருமாக வைத்துக்கொண்டு ஊசலாடுகிறோம். இதனால்தான் வீடுதோறும் ராட்டை நூற்கவேண்டும் என்றாலோ, கழிவு உரம் தயார்செய்ய வேண்டுமென்றாலோ உங்கள் சிந்தனையில் அது அறிவீனர்களின் செய்கை என்று தோன்றுகிறது. எனவே, காந்திஜியின் சொற்படி ராட்டை நூற்காமல், நேருஜி ஆலைகளை ஏற்படுத்தி உங்களுக்குத் துணி வினியோகிக்க வேண்டுமென்கிறீர்கள். ஆலைகள் ஏற்படுத்த, தொழிற்சாலை தளவாடங்கள் யந்திரசாதனங்களுக்கு, மூலதனம் வேண்டும். மூலதனம் காகிதநோட்டாக இல்லாமல், தங்கமாக இருத்தல் வேண்டும். இருநூறு வருஷமாக அந்நியர் இட்ட கொள்ளையில் நம்நாட்டுத் தங்கம் அனைத்தும் ஏற்றுமதியாகிவிட்டது. எனவே இன்று ராட்டையைவிட்டு ஆலைகள் ஏற்படுத்த விரும்பினால், 'அமெரிக்கத் தங்கம்' என்ற மூலதனம், 'வெளிநாட்டுச் செல்வாக்கு' என்ற பிசாசாக மாறி உங்களை ஆட்கொள்ளும்.

வெளிநாட்டு மூலதனம் இங்கு வந்தாலும், இத் தொழிற்சாலைகளை நடத்துவது யார்? விவசாயிகளின் திறமை அவ்வளவுக்கில்லை. பழக்கமும், மூலதனமும், நுட்ப அறிவும், திறமையும் உள்ள முதலாளியைத்தான் மறுபடி

யும் நேருஜி தேடவேண்டிவரும். இம் முதலாளிகளை ஒழிக்கத்தானே 30 வருஷங்களாக நீங்கள் கோஷமிடுகிறீர்கள்! என்ன விந்தை! நாம் விரும்பாதவரிடம் நம் தலைவர் தஞ்சமடையவேண்டும் என்றால் அவர்களுக்கு அவமானம், உங்களுக்கும் கஷ்டம் அல்லவா?

தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குப் பரந்த அளவில் நிலம் வேண்டும். உங்கள் சர்க்கார் உங்களிடமுள்ள நிலத்தைப் பிடுங்கி உங்கள் எதிரிகளான முதலாளிகளுக்கு வழங்கவேண்டும். ஆலைகள் மூலம் உங்களுக்குத் துணி கிடைக்க வேண்டுமானால், முதலாளிகளைக் குடியேற்றிக் குடியானவர்களை ஒழிக்கவேண்டும் என்பதே பொருளாகும்!

காங்கிரஸ் சர்க்கார் ஜமீன்தாரி முறையை ஒழித்து வருகிறதென்றால், 'நம்மைக் கொடுமைப்படுத்தியவன் அழிந்தான்' என்று உங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால் காந்திஜியின் பேச்சைக் கேளாமல் நீங்கள் எதிர்கொண்டழைக்கும் முதலாளிகள் ஜமீன்தார்களைவிடக் கொடியவர்கள். எல்லாப் பொருள்களும் யந்திரத்தின்மூலம் தயாராக வேண்டுமென்று ஏற்பட்டால், இவ்வியந்திரசாலைகள்; பெரிய நகரங்களில் மட்டுமின்றி, உங்கள் கிராமத்திலும் பரவ ஆரம்பிக்கும். ஏதோ ஒரு ஜமீன்தார் ஒரு சில கொடுமைகள் செய்துவந்தார் என்றால், இம்முதலாளி வர்க்கத்தார் நூறு ஜமீன்தார்களைப்போல மாட மாளிகைகள் கட்டி, தமது ஆயிரக்கணக்கான பரிவாரங்களுடன் தொழிற்சாலைகளில் அமர்ந்துவிடுவார்கள்.

தொழிற்சாலைச் சூழ்நிலையில் ஒழுக்கங்கெட்ட பல்லாயிரம் மக்கள் உங்கள் வீடு வாசல்களில் அநியாயமும் துர்நடத்தைகளையும் பரப்பினால், உங்கள் நிலை என்ன? உங்கள் பொருள், மக்கள், மரியாதை, கௌரவம் எல்லாம் கொள்ளை போவது நிச்சயம். காந்திஜி சொல்லியபடி நீங்கள் உங்கள் சொந்த உழைப்பால் உணவும் உடையும் தயார் செய்யவில்லையானால் ஏற்படும் பலன் இதுவே யாகும்.

யந்திரத் தொழிற்சாலைக்காக காங்கிரஸ் சர்க்கார் முதலாளிகளிடம் சிக்கிவிடுமானால் மற்றொரு அபாயமும் சம்பவிக்கலாம். ஏனெனில் நம் முதலாளிகளிடம் அவ்வளவு பொருள் ஏது? கிராமத்து ஜமீன்தாரிடம் பண்ணையடிக்கும் கூலியாள்போல, வெளிநாட்டுக் கொள்ளைக்கார முதலாளிகளிடம் கூலிவேலை செய்து, கமிஷன் வாங்கி, ஏதோ சிறு சிறு தொழில் நடத்திக் கொஞ்சம் பணம் சம்பாதித்தார்கள். பண்ணையாளின் வீட்டில் கலியாணம், சாவு ஏற்பட்டால் ஜமீன்தாரிடம் கடனோ யாசகமோ கேட்கவேண்டியது போல, பெரிய தொழிற்சாலை நடத்தவேண்டுமானால் இவர்களும் வெளிநாட்டுச் சுரண்டல் வர்க்க முதலாளிகளை அழைக்கத்தான் வேண்டியிருக்கும். அது மட்டுமா? ‘இன்றுவரை நம்மை ஒழிக்க வேண்டுமென்று சொல்லிவந்தவர்கள் நம் வலையில் விழ வருகிறார்கள்’ என்று முதலாளிகளுக்குத் தெரிந்து, அவர்கள் இந்நிலையைப் பயன்படுத்தி, முதலாளித்துவ—மூலதன இரட்டைப் பிசாசுகள் ஆகி உங்களை ஆட்டிவைப்பார்கள். அப்போது ‘வெளிநாட்டு மூலதனம்’ என்ற பிடாரி ‘உள்நாட்டு முதலாளி’ என்ற ஜடாமுனியுடன் ‘தொழில் மயம்’ என்ற உருவத்தில் நம் நாடு முழுவதையும் சுவாதீனப்படுத்திக்கொள்ளும் என்பதை அறியவேண்டும். ஆகையால் வெளி நாட்டு உள் நாட்டு முதலாளிகளோ, பணக்காரர்களோ நம் சுயராஜ்யத்தை சுவாதீனப்படுத்த விடக்கூடாது.

தொழிற்சாலைகளை சுவாதீனப்படுத்துவதாலேயே சுயராஜ்யத்தை எப்படி சுவாதீனப்படுத்த முடியுமென்று பார்ப்போம். உள் நாட்டு—வெளி நாட்டு முதலாளிகள் சேர்ந்து தொழிற்சாலைகள் ஏற்படுத்தினால், அங்கு உற்பத்தியாகும் பொருள்களை உங்களுக்கு விநியோகிக்க தங்கள் நண்பர்களான ஓர் நடுத்தர வகுப்பைச் சிருஷ்டிப்பார்கள். ஆங்கிலேயர் இருந்தவரையில் நாட்டைச் சுரண்ட, ஆட்சிசெய்வோருக்கு, வால் பிடிக்கும் கும்பல் ஒன்று இருந்தது. இக்கும்பல் ஏழை மக்களை வாட்டியும் சுரண்டியும் பிழைத்தது. சாம்ராஜ்யத்தின் இந்த “வால்”

கும்பல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைவிடக் கொடியதாக இருந்தது உண்மை. இலங்கையை அழித்தது ஹநுமான் அல்ல, அவர் வால்தான்! வெளி நாட்டு—உள் நாட்டு முதலாளிகள் கிராமத்து "வால்" கும்பலுடன் சேர்ந்துவிட்டால் இம்மூவரும் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றுவது கடினமல்ல. "நாங்கள் அவர்களை அறிவோம். அவர்களுக்கு வோட்டளிக்க மாட்டோம், உங்கள் பிரதிநிதிகளுக்குத் தான் எங்கள் வாக்கு" என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் பொருளாதாரத்துறையில் ஆதிக்கம் ஏற்பட்டபின்பு நம்மில் சிலரை 'விலை கொடுத்து வாங்குவது' அவர்களுக்குச் சிரமம் இல்லை. நாடகத்தில் வேஷம் பூண்டு பேசும் கபட சன்னியாசிகளைப் பார்த்திருப்பீர்கள். அதேபோல், இப் பிரதிநிதிகள் தேச பக்தர்கள் வேஷத்தில் முதலாளிகளின் பேச்சையே பேசுவார்கள். அவர்கள் உண்மையான தேச பக்தர்களா அல்லது முதலாளிகளின் கைப் பொம்மையா என்று நீங்கள் அறிவதெப்படி? இப்படிப் பட்ட பொம்மை தேசபக்தர்களைக்கொண்டு அவர்கள் ஆட்சிப்பீடத்தை அடைவார்கள். எனவே, இந்தியாவில் வந்து சேரும் மூலதனப் பிடாரி இந்திய அன்னையின் நன்மைக்கு அல்ல; அவளை ஒழிக்கும் சக்தியாகத்தான் இருக்கும். நம் உண்மை நிலை யறியாது, ஒவ்வொன்றுக்கும் டில்லியையும் கல்கத்தாவையும் எதிர்பார்த்தால் நம்மையே விழுங்கக்கூடிய கொடிய அரக்கன் இந்நாட்டில் தோன்றுவான். அந்நிய முதலாளி, உள்நாட்டு முதலாளி, நாடு முழுதும் பரவியிருக்கும் தரகர் கும்பல், விலைக்கு வாங்கின தேசபக்தர் கூட்டம் என்று இவ்வரக்கனுக்கு நான்கு தலைகள் இருக்கும். அவன் உங்களை அணைப்பது முன் காலத்தில் திருதராஷ்டிரன் பீமனைக் கட்டிக்கொண்ட கதைபோலாகும். எனவே உங்களுக்குக் கிடைத்த சுயராஜ்யத் தீர்ப்பு, முதலாளித்துவ எதேச்சாதிகாரக் கும்பலுக்கு சுவாதீனமாகிவிடுமேயல்லாது, உங்கள் கைக்கு வராது. நீங்கள் வீடுதோறும் ராட்டை சுற்றுவிட்டால் வெள்ளையர் வெளியேறியும் நாட்டுக்கு சுதந்திரம் இல்லை என்று காந்திஜி சொன்னதன் கருத்தும் இதுவே.

ஆங்கிலப் படிப்பும், ஆங்கில மனப்பான்மையும் உள்ள சிலர் இவ்வாறு கேட்கலாம்: "நாம் மத்திய—மாகாண சர்க்கார்களிட மிருந்து தேவையான பொருள்களைக் கேட்பதால் நேருஜி போன்ற தலைவர்கள் முதலாளிகளின் அடிமையாவானேன்? நாட்டின் மூலதனமனைத்தையும் முடக்கி சர்க்கார் சார்பில் தொழிற்சாலைகளை நடத்தினால் எல்லாம் சரியாகிவிடுமல்லவா?", முதலாளிகளிடம் கொண்ட வெறுப்பினால், இப்படிச் சொன்னவுடன் இது சரியான வழி எனத் தோன்றுகிறது. ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும், இவ்வழியில் என்ன இடையூறு ஏற்படும், இவ்விதம் செய்தும் உண்மை சுயராஜ்யம் உங்கள் கைக்கு எட்டாமல் எப்படி யிருக்கக் கூடும் என்பவற்றை ஆலோசிப்போம்.

தொழிற்சாலைகளை சர்க்காரே நடத்துவதற்குப் போதுமான தங்கம் எங்கிருக்கிறது? இன்று தங்கம் அமெரிக்காவில்தான் இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும், நானும் சொன்னேன். அமெரிக்கா முதலாளித்துவ நாடு; அந்நாடு நமக்கு மூலதனம் கொடுத்தாலும், நம் நாட்டிலுள்ள முதலாளி வர்க்கத்தை எப்படியாவது காப்பாற்றியே தீரும், இது இயற்கை. ஒரு பக்கம் நேருஜி முதலாளிகளை ஒழிக்கவேண்டு மென்றும், மறு பக்கம் அவர் அந்நிய முதலாளிகளிடம் பிச்சையெடுக்க வேண்டுமென்றும் நீங்கள் நினைத்தால் சேர்ந்தாற்போல் இவ்விரண்டும் எப்படி நடக்கும்? முதலாளிகள் தங்கள் "வர்க்கத்தைப்" பார்ப்பார்களே யல்லாமல் அவர்களிடம் நாட்டு வேற்றுமை இருக்காது. எனவே உலக முழுதும் உள்ள முதலாளிகள் "ஒரு கூடை செங்கலும் பிடாரி" என்பதற்கு ஒப்பாவர். அவர்களிடம் ஒற்றுமை இருந்தே தீரும். எனவே ஒரேயடியாக முதலாளிகளின் மூலதனத்தை ஜப்திசெய்து அமெரிக்காவிலிருந்து தங்கம் வரவழைக்க விரும்பினால் இவ்விடையூறு ஏற்படும்.

அமெரிக்கத் தங்கம் கிடைப்பதில்தான் கஷ்டம் என்பதில்லை. இம்முதலாளிகளின் மூலதனத்தை முடக்குவதும்

சுலபமில்லை. ஜமீன்தாரின் நிலத்தைப் பிடுங்குவது எளிது. ஏனெனில் அவர்களின் சொத்து ஏற்கெனவே உங்களிடமிருக்கிறது. அவர்கள் சோம்பேறிகள், கவலைப் படாதவர்கள்; எனவே ஓர் சட்டம் இயற்றினல் போதும். ஆனல் இம்முதலாளிகள் அப்படியல்ல. உலகில் உள்ள ஜாதிகளில் இந்த முதலாளித்துவ ஜாதியே சுறுசுறுப்பும், சாமர்த்தியமும், திறமையும் உள்ளது. அவர்களின் மூலதனம் அவர்கள் கையிலேயே இருக்கிறது. மூலதனம் முடக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டவுடனே அவர்களின் சொத்து நீங்கள் கண்டறிய முடியாவண்ணம் மண்ணில் மாயமாய் மறைந்துவிடும்! சர்க்கரைக்குக் கட்டுப்பாடு என்றவுடன் இம்முதலாளிகள் செய்த அநியாயம் நீங்கள் அறிந்ததே. அவர்களின் சொத்து முழுதையும் முடக்குவதென்பது மிக ஆபத்தான தாக்குதல். இன்று நாட்டில் பலப் பல எதிர்ப்புகள், தாக்குதல்கள் நடைபெறுகின்றன — சமூக எதிர்ப்பு, இயற்கை எதிர்ப்பு, ஒழுக்கக் குறைவு என்ற எதிர்ப்பு. இவ்வெதிர்ப்புகளுடன் மற்ருெரு புதிய, பலமான எதிர்ப்பை விலைக்கு வாங்குவது புத்திசாலித்தனமா என்று பார்க்கவேண்டும். காலநிலை சக்தி வாய்ந்தது. நீங்கள் விரும்பினலும் விரும்பாவிட்டாலும், அது உங்களிடம் பல காரியங்களைச் செயல் படுத்துகிறது. எனவே, சென்ற மகாயுத்த நிலையில், வேறு வழியற்று சர்ச்சில் ஸ்டாலினிடமும், ஸ்டாலின் டோஜோவிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியிருந்தவாறு, இன்று நமது தேசீய, அகில உலக நிலையைப் பார்த்தால், யந்திரத் தொழிற்சாலை வழியைப் பின்பற்ற விரும்புவோமாயின் காலநிலையில் கட்டுப்பட்டு நீங்கள் இஷ்டப்பட்டாலும் படாவிட்டாலும் முதலாளிகளிடம் உடன்பாடு செய்துகொள்ளும் ஒரு நிலை ஏற்பட்டேதீரும்.

ரஷ்யாவில் இக்காரியம் எப்படி சாத்தியமாயிற்று என்று அறிவாளிகள் கேட்கலாம். ரஷ்யாவில் இவ்வேலை நடைபெறும்போது அங்கு முதலாளிகளின் ஸ்தாபனம்

உருவெடுக்கவில்லை என்பதை மறுக்கவியலாது. எனவே, முளையிலே கிள்ளி யெறிவது கஷ்டமில்லை. ரஷ்யாவைப் பற்றிப் பேசுபவர்கள் அங்குள்ள விவசாயிகளின் நிலை என்னவாயிற்றென்பதை நேர்மையாக எடுத்துச்சொன்ஞல் நீங்கள் ரஷ்யாவைக் கனவிலும் நினைக்கமாட்டீர்கள்!

ஆங்கில மனேபாவக் கருத்தை ஏற்று, சகல கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு, சர்க்கார் எல்லாத் தொழிற்சாலைகளையும் தன் வசப்படுத்தி தேசியத் தொழில் மயமாக்கினல் உங்களுக்கென்ன லாபம்? சர்க்கார் சார்பில் தொழிற்சாலை நடந்தால், நீங்கள் கிராமத்தை விட்டுத் தொழிற்சாலை நடத்தப் போவீர்களா? சர்க்கார் தரப்பில் தொழிற்சாலை நடத்துவது என்பதற்கு அதற்கென ஒரு தனி இலாகா ஏற்படுத்துவது என்பதே பொருள். சர்க்கரைத்தொழில் முதலாளியிடம் இருந்தால் நீங்கள் உங்கள் கரும்பை விற்று சர்க்கரைக்காக முதலாளியின் தலைவாசலில் காத்துக்கொண்டிருப்பீர்கள். இத்தொழில் சர்க்காரிடம் இருந்தால் நீங்கள் அந்த இலாகா அதிகாரியின் வாசற்படியில் தவம் புரிவீர்கள். அதிகாரிகள் எப்பேர்ப்பட்டவர்களென்று நீங்கள் அறிவீர்கள். எனவே, ராட்டை, உரல்—உலக்கை, ஏர்—கலப்பை முதலியவற்றை விட்டு தொழிற்சாலையை ஏற்படுத்தினல் அது முதலாளியிடமோ, சர்க்கார் இலாகா அதிகாரியிடமோ தான் இருக்கும். ஒரு வகையில் நாட்டில் முதலாளித்துவ வியாபார ஆதிக்கம் இருக்குமேயானல் மறுவகையில் அதிகார வர்க்க ஆதிக்கம் ஏற்படும்.

அதிகார வர்க்க ஆட்சி முதலாளித்துவ ஆட்சிக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல. நாட்டுப்புறங்களில் எங்கு பார்த்தாலும் இன்று ஒரே 'இன்ஸ்பெக்டர்கள்' மயமாக இருக்கிறது. விவசாயம், கூட்டுறவு, பள்ளிக்கூடம், சுகாதாரம், போலீஸ், கால்நடை, மீன் வளர்ப்பு, கோழிப் பண்ணை, கொசுஒழிப்பு, தொத்துநோய் என்று பதினயிரம் இன்ஸ்பெக்டர்கள் 24 மணி நேரமும் சர்க்கார் தரப்பில் கிராம நிர்வாகத்திற்காக பவனி வந்தவண்ணம் இருக்

கிறார்கள். இத்துடன் இவர்களின் தலைமை உத்தியோகஸ்தர்கள் என்ற கும்பல் ஜில்லாவின் தலைநகரத்திலிருந்து டில்லிவரை பரந்து வளர்ந்து இருக்கிறார்கள். நீங்கள் மாதம் 15 ரூபாய் உணவு சாப்பிடுவீர்களானால் இவர்கள் ஒவ்வொருவரும் மாதம் 1500 ரூபாய் கூலிசெய்து விடுகிறார்கள். அதிகாரவர்க்கத்தில் பிரதி நபரும் நூறு கிராமத்தார்களைத் தன் வயிற்றில் திணித்துக்கொள்கிறார் என்பது தான் இதன் பொருள். நிர்வாகம் என்ற வேஷத்தில் அடிமுதல் நுனிவரை நம்மை எப்படி உறிஞ்சுகிறார்கள் என்பது உங்களுக்கு எளிதில் விளங்கும். தற்போது தங்கள் சம்பளம் போதாதென்று இவர்கள் கூக்குரலிடுவது வேறு. முதலாளித்துவ ஆதிக்கத்தில் "கொள்ளை லாபம்" இருக்குமேயானால் அதிகாரவர்க்க ஆதிக்கத்தில் "லஞ்சப்பேய்" தலைவிரித்தாடும். இருவகையிலும் உங்கள் பணமே கொள்ளைபோகிறது. சுயராஜ்யத் தீர்ப்பு உங்கள் பேருக்குச் சாதகமாக இருந்தாலும் அதை முதலாளிகளோ, அதிகாரிகளோதான் சுவாதீனப்படுத்திக்கொள்வர்.

சுயராஜ்யத்தில் அருவருப்புக் கொள்வதிலோ காங்கிரஸ் ஆட்சியில் குறைபாடு காண்பதிலோ பயனில்லை. கொள்ளைபோன வீட்டை மறுபடியும் செப்பனிட முயற்சி செய்யவேண்டும். வெள்ளையர் வருவதற்கு முன் கிராம மக்கள் சுதந்திரமாக இருந்தனர். அவர்களின் சுயராஜ்யம் அவர்கள் வீட்டிலேயே இருந்தது. தம் தேவைகளுக்கு அவர்கள் பிரதி நிமிஷமும் சர்க்கார் இலாகாவுக்குப் போகவில்லை; இந்த சர்க்கார் அதிகாரிகளும் கிராம மக்களைப் பிடித்து ஆட்டவில்லை. நாட்டு நலனுக்கு யாகம் நடந்தது. புரோகிதர் நிர்வாகத்திற்கு நீங்களே ஏற்பாடு செய்தீர்கள். யாகத்திற்கு வேண்டிய பொருள்களை நீங்களே சேகரித்தீர்கள். நீங்களே வேண்டிய தியாகமும், ஆஹுதியும் செய்தீர்கள். தாடகை போன்ற ராக்ஷஸிகள் யாகத்தைக் கெடுக்க வந்தால் அப்போது காப்பாற்றுவதற்கு மட்டும் அரசனிடம் உதவி கோருவது உண்டு; உள்ளூர் நிர்வாக விவகாரங்களில் தலையிடுவதற்கல்ல. அக்காலத்தில்

உங்கள் காரியங்களை நீங்களே நிர்வகித்து வந்தீர்கள். அரசன் உங்களை ஆபத்து வேளையில் காப்பாற்றவும், ஆசியளிக்கவும் மட்டுமே இருந்து வந்தான்.

அக்காலத்தில் கிராம சமூகம் இருவகையில் முன்னேறி வந்தது. விவசாயம்—விற்பனை, வீடு—குடித்தனம், கலியாணச் சடங்குகள் கூட்டுறவிலும், சண்டை சச்சரவு, திருட்டுப் புரட்டு முதலியவற்றின் நிர்வாகம் பஞ்சாயத்து முறையிலும் நடந்தது. முன் காலத்து ஹிந்து அரசர்களும், பிற்காலத்து முகம்மதிய அரசர்களும் இதே முறைகளைக் கையாண்டதால், ஆட்சியாளர் மாறியும் மக்களின் நிலை உன்னதமாகவே இருந்துவந்தது. ஏனெனில், ஒரே மாதிரி யந்திரத்தை யார் ஓட்டினாலும் அதன் வேலை ஒரே மாதிரிதானே இருக்கும்!

வெள்ளையரோ, நாட்டின் நலனைக் கருதவில்லை; சுரண்டுவதே அவர்களின் லட்சியம். எனவே, சமூக முன்னேற்ற முறைகளை விட்டு, நம் நாட்டையும் சமூகத்தையும் ஒடுக்க முதலாளித்துவ அதிகாரவர்க்க முறைகளை ஏற்படுத்தினர். உங்கள் தேவைக்கான பொருள்களை விநியோகிக்க உங்களோடு ஜில்லாவையும், மாகாணத் தலைநகரையும், டில்லியையும், அத்துடன் லண்டனையும் ஒரே சங்கிலியில் பிணைத்தனர். ஒவ்வொரு தேவைக்கும் லண்டனுக்குப் போக நேரிட்டது. அதிகாரவர்க்கச் சங்கிலியில் கிராமத் தலையாரி முதல் வைஸ்ராய் வரை பிணைக்கப்பட்டார்கள். எனவே இவ்விரண்டு சங்கிலிகளையும் உங்கள் மூக்கில் கட்டி லண்டனிலிருந்தவாறே வேண்டியபடி நம்மை ஆட்டி வந்தனர்.

சென்ற 50 வருஷப் போராட்டத்தில் லண்டனின் ஆதிக்கம் இன்று அகன்றுவிட்டது. ஆனால் டில்லி ஆதிக்கம் இன்னும் வலுவாக இருப்பதை நீங்கள் காணலாம். இந்த அடிமைச் சங்கிலியில் நாம் மாற்றுத்தலைப்பை அவிழ்க்க முயற்சி செய்கிறோம். முதலில் நம் மூக்கில் கட்டியிருக்கும் பக்கத்தைக் கழற்றிவிடவேண்டுமென்று அடிக்கடி காந்திஜி சொல்லிவந்தார். நம் தேவைகளை

நாமே கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்து, கிராமத்து உள் நிர்வாகத்தைப் பஞ்சாயத்து முறையில் நடத்தி, சுய தேவைப் பூர்த்தியுள்ள சமூகமாகி, ஆங்கிலேயரைக் கப்ப லேற்றியதுபோல், இந்த முதலாளித்துவத் தரகரிடமிருந்தும் அதிகார வர்க்கத்திலிருந்தும் தப்பினுல்தான் கிராம மக்க ளுக்கு உண்மையான விடுதலை ஏற்படும். அப்போதுதான் சுயராஜ்யத்தை அவர்கள் அனுபவிக்க முடியும் என்பதே இதன் கருத்து.

காந்திஜியின் வார்த்தைகளை அசட்டை செய்து, 'குடி யாட்சி—தொழிலாளர் ஆட்சி' என்று கோஷம்போடுகி றீர்கள். பெரிய பணக்காரர்களும் இத்தகைய கோஷங் களைப் பரப்பி உங்களை மதிமயக்குவதால், உங்கள் பொறுப்பை மறந்துவிடுகிறீர்கள். வீண் கோஷத்தினுல் இந்த முதலாளித்துவ—பணக்காரப் பிடாரியை விரட்ட முடியுமா? கூட்டம் கூடி வாயளவில் பேசிவிட்டு, வீட் டுக்குத் திரும்பினுல் மறுபடியும் பழய கருப்பன் கருப் பனே என்ற பழமொழிதான் ஆகும். வெறும் கூட்டங் களில் தலைவன் என்ருகாமல், உண்மையாகவே கிராமத் தலைவனுக ஆவதற்கான ஆற்றலும் சாதனையும் பெற வேண்டும். இல்லாவிட்டால், முன்காலத்தில் அபினி கொடுத்து மக்களைக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரர் களைப்போல், இம்முதலாளிகளும் அதிகாரிகளும் உங்கள் நிர்வாகம் என்ற பெயரில் பல கட்சிகளாகப் பிரிந்து உங்களைத் தூண்டிவிட்டு வருவார்கள். "இந்தக் கட்சிக் காரர் அயோக்கியர்கள், எங்களை ஆட்சிப் பீடத்தில் ஏற்றி ஞல் எல்லாம் சரியாகிவிடும்" என்று சொல்லி, முதல் கட்சியை முறியடிக்க உங்களை ஏவுவார்கள். பிறகு மூன் ருவது கட்சி புதிதாக உருவெடுத்து, இரண்டாவது கட்சி யுடன் உங்களைப் போர்செய்ய வைக்கும். எல்லையற்ற இச்சண்டைகளில் உங்கள் வாழ்வும், சொத்தும் நாசமாகி விடும். சரித்திரத்தில் பார்த்தால், இப்படிப்பட்ட தலை வர்கள், ஓர் இயக்கம் ஆரம்பிக்கும்போது "குடியானவர், தொழிலாளர் ஆட்சி" என்பர். இயக்கம் முடிந்து ஆட்சி

ஏற்படும்போது "குடியானவர்—தொழிலாளர்களுக்காக ஆட்சி" என்று ஆகும். ஆட்சிப் பீடத்திலமர்ந்து, கட்சி பலப்பட்டு, ஆட்சி நடக்கும்போதோ அதுவே "குடியானவர்-தொழிலாளரின்மேல் ஆட்சி" என்று மாறிவிடும். நீங்கள் பிறரை நம்பாமல், தன்னம்பிக்கையுடன், சுயதேவைப் பூர்த்திக்கு வழிகாண வேண்டுமென்பதே காந்திஜியின் எச்சரிக்கை.

இப்பிரசினையைத் தீர்ப்பது எப்படி? உணவு உடை இரண்டிற்காகவும் கிராமத்தில் பலமான பஞ்சாயத்து அமைப்பு ஏற்பட வேண்டும். இவ்விரண்டு தேவைகளைப் பூர்த்திசெய்யும் முறையிலேயே முதலாளிகள் உங்களை முடக்குகிறார்கள். நீங்கள் விவசாயிகள். நம் நாட்டாரின் வயிற்றுக்கு உணவு கொடுப்பது உங்கள் கடமை. இன்று உற்பத்தி செய்யும் உணவு போதாது. உலகத்திற்கே உணவளித்து வந்த இந்தியா, இன்று, 100 கோடி ரூபாய் பெறுமான உணவை வெளிநாட்டிலிருந்து வரவழைக்கிறது என்றால், இது இந்திய விவசாயிகள் வெட்கித் தலைகுனிய வேண்டிய விஷயம். ஆங்கிலேயர் 60 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி கொண்டுவந்தபோது, நீங்கள் அதிகத் தானியம் உற்பத்திசெய்து துணிக்கு விலை கொடுத்தீர்கள். தற்போது உணவுத் தானியமும் வெளிநாட்டிலிருந்து வரவழைத்தால், அதற்குப் பதிலாக நீங்கள் என்ன ஈடுசெய்ய முடியும்? அதைப்பற்றிச் சிந்திக்கவேண்டாமா? இவ்வளவும் கடனாக வாங்க முடியுமா?

ரொக்கம் கொடுத்து வாங்கினபோதே ஆங்கிலேயர் நம் எஜமானர்களாக இருந்தார்களென்றால், இன்று கடனாகக் கொடுப்பவர் நம்மைச் சும்மா விட்டுவைப்பார்களா? ரொக்கத்திற்கு விற்கும் செட்டியும் கடன் கொடுக்கும் பட்டாணியும் ஒன்றுதான். ரொக்கத்திற்கு விற்ற பிரிட்டனும், கடன் கொடுக்கும் ரஷ்யாவும் அமெரிக்காவும் மிகக் கொடியனவே. ஆகையால், இந்த 100 கோடி ரூபாய்த் தானியம் இறக்குமதியாகாமல் இருக்க விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

நல்ல மாசூலுக்குக் கால்நடையும், உரமும் தேவை. நம் நிலத்தில் விளைச்சல் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்து விட்டதென்று சொல்கிறோம். இதன் காரணத்தை ஆராய்வோம். தொன்றுதொட்டு நம் நிலத்தில் பாதிப் பங்கு உணவு உற்பத்திக்கும் மீதிப் பாதிப் பங்கு கால்நடைக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேய்ச்சல் நிலங்களில் பசுக்கள் காலாற மேய்ந்து வந்தன. பசுவின் காளைக் கன்றுகள் நம் நிலத்தை ஆழ உழுதுவந்தன; அதன் சாணம் சிறந்த எருவாயிற்று; அதன் பால் குடித்து நம் மக்கள் தேக வலிமையுடன் உழைத்து வந்தனர். இந்திய மண்ணில் உற்பத்திப் பெருக்கத்திற்கு இதுவே காரணம். நம் சமூகத்தில் கோ—சேவையின் மகிமைக்கு இதுவே காரணம்.

வெள்ளையரின் மில் துணி வந்ததும் நீங்கள் ராட்டையை விட்டுவிட்டீர்கள். துணிக்கு விலை கொடுக்க மேய்ச்சல் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து, அதில் தானிய உற்பத்தி செய்வதற்காக பல்லாயிரக் கணக்கான பசுக்களை உணவின்றிக் கொன்றீர்கள். மில் துணிக்காகப் பசுபலி என்ற பாவம் நம்மைச் சார்ந்தது. பசுவதை என்பதற்காக முகலாயர்களிடம் பகைமை கொள்ளும் நாம், இந்த மில் தேவதைக்கு எவ்வளவு பசுபலி இடுகிறோம் என்று சிந்திப்பதுண்டா?

கால்நடைச் செல்வம் குறைந்ததுடன் உரமும் குறைந்தது. சாகுபடி நிலத்தைப் பெருக்கியும், உரமும் உழைப்பும் இல்லாததால், உற்பத்தி குறையலாயிற்று. உண்போர் எண்ணிக்கையும் இரட்டிப்பு ஆயிற்று. பால் குடிக்கும் பாலர் பாலில்லாமல் பத்துவேளை சாப்பிட நேர்ந்தது. இவ்வளவுக்கும் உணவு ஏது? அதற்குமேல், உணவை விற்றே உடை வாங்கவேண்டுமென்றால் எவ்வாறு முடியும்? எனவே, உணவு உற்பத்தி செய்து நல்வாழ்வு வாழவேண்டுமென்றால் அதற்குப் பசு பாலனம் உடனடியான கடமை.

தற்காலம் நம் நாட்டில் 'மகிஷாசுர' (எருமை) மோகம் காணப்படுகிறது. உழைப்புக்குக் காளையும், பாலுக்கு

எருமையும் என்ற நிலை ஏற்படுகிறது. காளைகளை மட்டும் வைத்துக்கொண்டால் பசுக்களை என்ன செய்வது? இன்று நம் நாட்டில் நாலு லட்சம் பசுக்கள் கொல்லப்படுகின்றன. 'மகிஷாசுர' னுக்காக இப்பலியை நாம் நடத்தவேண்டுமா? புராண காலத்தில் இதேமாதிரி நிலை ஏற்பட்டது. மக்கள் இம்மகிஷாசுரனை ஒழிக்க அரும்பாடு பட்டனர். கடைசியில், பார்வதி அன்னையின் அருளால் அவ்வீரக்கன் அழிந்தான். இன்று நம் நாட்டைக் காப்பாற்ற மறுபடியும் மகிஷாசுரனை ஒழிக்கவேண்டும். இதனால், தர்மம் காப்பாற்றப்படும்; செல்வம் பெருகும்; நிலம் விளையும். எனவே எருமைகளுக்குப் பதிலாக பசுமாடுகளை வளர்ப்பது நம் கடமை.

மாடு வளர்ப்பது எப்படி? மேய்ச்சலுக்கு நிலம் எங்கே? இங்கு மங்கும் காலியாய் இருந்த தரிசு நிலங்களையும் ஜமீன்தார்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டார்கள். கால்நடைக்குத் தீவனம் எப்படிக் கிடைக்கும்? இப் பிரசினையை ஆராய்வோம்.

ராட்டையை விட்டுத் துணிக்கு ஆலைகளை நம்பியிருந்த போது, இத்துணியின் விலைக்காக அதிகத் தானியம் உற்பத்தி செய்யவேண்டுமே என்று வீண் எண்ணங்கொண்டு, கால்நடைகளுக்கான நிலங்களைப் பசுக்களிடமிருந்து பிடுங்கினோம். "இப்பசுக்களின் நிலங்களை மறுபடியும் அவைகளுக்கே கொடுத்துவிடுங்கள்" என்று காந்திஜி சொல்லிவந்தார். குடியானவர்களிடமிருந்து, எந்தக் காரணத்தினாலும் சரி, பிடுங்கப்பட்ட நிலத்தைத் திரும்பவும் அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று ஒரு சட்டம் இயற்றினால் நீங்கள் எவ்வளவு சந்தோஷமடைவீர்கள்? அந்நிலையை அனைவரும் வரவேற்பீர்கள் அல்லவா? அப்படி ஓர் சட்டம் வந்தால் முதல் முதலில் கால்நடைகளுக்குச் சொந்தமாய் இருந்த நிலங்களை அவைகளுக்குத் திருப்பித் தருவதுதான் முறை. ஆனால் இக்கால்நடையின் நிலங்கள் இன்று யார் வசம் இருக்கின்றன? யாரிடமிருந்து இதை வாங்கித்தருவது என்ற பிரசினை கிளம்புகிறது.

உங்கள் ஊருக்குப் பிரதி வருஷமும் எவ்வளவு துணி வருகிறது? அதற்கு விலை கொடுக்க எவ்வளவு நிலத்தில் தானிய உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது என்று யோசியுங்கள். உங்கள் நிலம் பெரும்பாலும் இந்த வான ளாவிய மெத்தைக் கட்டிடங்கள் கொண்ட ஆலை அரக்க னின் வசமே இருக்கிறதென்பது நன்கு புலனாகும். நீங்கள் சாதுவான பசுக்களின் நிலத்தைப் பிடுங்கி ஆலை அரக்கனிடம் அடகு வைத்திருக்கிறீர்கள்.

ராட்டையில் நூல் நூற்று வேண்டிய ஆடைகளைத் தயார் செய்துகொண்டு. பசுக்களின் மேய்ச்சல் நிலங்களை ஆலை அரக்கனிடமிருந்து பிடுங்கி மறுபடியும் கால்நடை களுக்கு அளிக்கவேண்டுமென்று காந்திஜி கடந்த முப்பது வருஷங்களாக உங்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார். இத னால் உங்கள் உடையும் உடலும் சீர்படும். சாகு படிக்காக மீதியிருக்கும் நிலத்தில் இரட்டிப்பு மகசூல் கிடைக்கும். "காந்திஜி, விவசாயத்தைப்பற்றிக் கவனிப்ப தில்லை; ராட்டையையே வற்புறுத்தி வந்திருக்கிறார்" என் பவரும் உண்டு. காந்திஜி தீர்க்கதரிசி; அவர் ஆழ்ந்த விஷ யங்களையே சிந்தித்து வந்தார்.

பசு பரிபாலனம் இல்லாமல் விவசாய முன்னேற்றம் ஏற்படாது. மேய்ச்சல் நிலம் இல்லாமல் பசு பரிபாலனம் நடக்கமுடியாது. ராட்டையில்லாமல் ஆலை அரக்கனிட மிருந்து மேய்ச்சல் நிலத்தை விடுவிக்க முடியாது. இக் காரணத்தால் காந்திஜி எப்பொழுதும் ராட்டையின் அவ சியத்தை உணர்த்தி வந்தார். எனவே, உங்களைக் காப் பாற்றிக்கொள்ள விரும்பினால் பாலுக்காக மகிஷாசுர எருமையையும் துணிக்காக ஆலை அரக்கனையும் ஒழித்தாக வேண்டும்.

இத்துடன், உங்களை அடக்குவதற்கென்று தலை தூக்கும் நான்கு தலை அசுரனையும் எதிர்க்கவேண்டும். நீங்கள் காண்பது உண்மை சுயராஜ்யம் இல்லை; சுதேசி ராஜ்யமே. இந்தியாவின் ஏழுலட்சம் கிராமங்களின் குடி யாட்சி இல்லாமல் சில நகரங்களின் ஆட்சிதான் இது.

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இருந்த தொடர்பு தான் இன்று நம் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இருக்கிறது. முதலில் இந்தியா மூலப்பொருளை உற்பத்திசெய்தது; அது இங்கிலாந்தில் யந்திரத்தில் பூர்த்தி செய்த பொருளாக மாறி மறுபடியும் இந்தியாவில் விற்பனைக்கு வந்தது. இதன் பயனாக இந்தியா ஏழையாயிற்று; இங்கிலாந்தில் பணம் கொழித்தது. இதைப்போலவே, நகரத்து ஆட்சியில் கிராம மக்கள் மூலப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள்; அது நகரங்களில் 'விற்பனைப் பொருளாக' மாறி மறுபடியும் கிராமங்களில் விற்பனையாகிறது. இதனால் கிராம மக்கள் வறுமையிலும், நகரவாசிகள் பெருமையிலும் வாழ்கிறார்கள். இந்நிலையை எதிர்த்துப் போராட வேண்டும்.

சுதேசி ஆட்சியை ஏற்படுத்துவதற்காகப் போர் புரிந்தபோது, முதல் இயக்கமாக அந்நியநாட்டுத் துணி அந்நியநாட்டுப் பொருள் ஆகியவற்றை நாம் பகிஷ்கரித்தோம். இதற்காக வெளிநாட்டுத் துணிகளைத் தீயில் இட்டோம்; கடைகளில் மறியல் செய்து அடிபட்டோம், சிறைசென்றோம்; பல கஷ்டங்களையும் அனுபவித்தோம். இப்போது சுதேசி ராஜ்யத்திற்குப் பதிலாக சுய ஆட்சி —கிராம ராஜ்யம்— ஏற்படுத்தவும் அதே மாதிரி இயக்கம் ஒன்று நடைபெற வேண்டும். வெளியிடத்துத் துணிகளையும் பொருள்களையும் கிராமத்தில் பகிஷ்காரம் செய்யவேண்டும். முன்சொன்ன நான்கு தலை அரக்கன் ஏதாவது ஆட்சேபித்தால் அவனையும் அதேமாதிரி எதிர்க்க வேண்டும். கிராம சுயராஜ்யப் போர் சாமானியமானதல்ல. இது மிகப் பெரிய வேள்வி ஆகும். இந்த வேள்வியைக் கெடுக்க கிராமந்தோறும் தரகர் கும்பல் என்ற தாடகை கோஷ்டிகள் பரவியிருக்கின்றன. இந்தத் தாடகைகளிடமிருந்து அஹிம்சா முறை மூலம் தப்பினால்தான் உங்கள் வேள்வி பூர்த்தியடையும். ராம லக்ஷ்மணரைப் போல அஹிம்சா முறையில் வாலிபர்கள் இக்காரியத்திற்கு சேவையும் தியாகமும் செய்ய முன்வர வேண்டும். காந்தி முனிவரின்

வேண்டுகோள் இதுவே. இவ்வேண்டுகோளை நிறைவேற்றுவதற்குத் தாய்தந்தையரான பல தசரதர்கள் தயாராக வேண்டும். அப்போதுதான் சுயராஜ்ய வேள்வி முடிவடையும்.

இங்கிலாந்திலிருந்து இந்தியச் சிம்மாசனத்தை எடுத்துவர 30 வருஷங்களுக்கு முன் வாலிபர்களை அழைத்தார் காந்திஜி. அன்று நாம் அனைவரும் வீடு வாசல் விட்டு, சுகம் சௌகரியத்தை உதறித் தள்ளி, பசி தாகம் மறந்து, காந்திஜியின் பின்னல் புரட்சிக்காகப் புறப்பட்டோம். இறக்கும் தருவாயிலும், டில்லியில் உள்ள சிம்மாசனத்தை மாற்றி கிராமங்களில் நிலைநாட்டும் புதிய அஹிம்சா புரட்சிக்கு வாலிபர்களை அழைத்தார் அவர். இன்றைய வாலிபர்கள் அவரது வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பார்களா?

## ஸர்வோதய பிரசுராலயம்
(அகில பாரத சர்க்கா சங்கம்)
வீரபாண்டி :: திருப்பூர்

### தொகுப்பு நூல்

| | | | ரூ. அ. |
|---|---|---|---|
| 1–3 | கதர் மலர் தொ. I. II, III; ஒவ்வொன்றும்; | | 0—8 |
| 4–5 | புனர் நிர்மாணம் I. II | ,, | 0—8 |

### கதர் சாஸ்திரம்

| | | | |
|---|---|---|---|
| 6 | நூற்புக் கணிதம். பாகம் 1 | 3ம் பதிப்பு | 0—6 |
| 7 | ,, II | 3ம் ,, | 0—8 |
| 8 | ,, III | | 0–14 |
| 9 | ,, IV | | 1—0 |
| 10 | நூற்புக் கலையின் நுணுக்கங்கள் | 2ம் பதிப்பு | 1—0 |
| 11 | தக்ளியால் நூற்பதெப்படி? | 3ம் ,, | 0—8 |
| 12 | கதர் உபகரணங்கள் | | 1—0 |
| 13 | கைராட்டை | 2ம் பதிப்பு | 1—8 |
| 14 | கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை | | 1—0 |
| 15 | நரம்பு செய்தல் | | 0—8 |
| 16 | பட்டை போட சுலபவழி | 2ம் பதிப்பு | 0—4 |
| 17 | பருத்திப் பிரசினை | | 0—6 |

### தத்துவ நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 18 | காந்தீய நவநீதம் | 2ம் பதிப்பு | 2—0 |
| 19 | புதிய கதர் இயக்கம் | (கைவசம் இல்லை) | 0–12 |
| 20 | சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் | | 1—0 |
| 21 | சர்க்கா சங்க வேலைத்திட்டம் | | 0—8 |
| 22 | சர்க்கா சங்க வரலாறு | | 1—0 |
| 23 | சேவாகிராம முகாம் | | 1—0 |
| 24 | ராட்டைப் புரட்சி | 2ம் பதிப்பு | 0—6 |
| 25 | கதர் தத்துவமும் சேவையும் | | 0–12 |
| 26 | விநோபா அறிவுரைகள் | | 0–12 |
| 27 | ,, பிரார்த்தனைப் பிரசங்கம் | | 0—8 |
| 28 | ஸ்வராஜ்யமும் சர்க்காவும் | | 0—8 |
| 29 | மலஜல சுத்தி | | 0—8 |
| 30 | துப்புரவு விஞ்ஞானம் | 2ம் பதிப்பு | 0—8 |
| 31 | சுயம்பூரண கிராமம் | | 0—5 |

| | காந்திஜி எழுதியவை | | ரூ. அ. |
|---|---|---|---|
| 32 | ஸர்வோதயம் | 2ம் பதிப்பு | 0—6 |
| 33 | சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் | 4ம் ,, | 0—4 |
| 34 | ஆசிரம வாழ்க்கை | | 1—4 |
| 35 | நீதி தர்மம் | | 0—4 |
| 36 | ராமநாமம் | | 0—12 |
| 37 | ஆசிரம பஜனாவளி (தொகுப்பு) | 3ம் ,, | 0—6 |
| 38 | ராட்டை-தத்துவ விளக்கம் | | 1—4 |
| | **காந்திஜியைப் பற்றியவை** | | |
| 39 | பாப்பாவின் காந்தி | 3ம் பதிப்பு | 0—12 |
| 40 | பாபு என் தாய் | | 0—10 |
| 41 | எமது பா பாகம் I | | 1—4 |
| 42 | ,, ,, II | | 1—4 |
| 43 | காந்திக் காட்சிகள் | | 1—4 |
| 44 | காந்திஜியின் குரல் | 3ம் பதிப்பு | 0—6 |
| | **இதர நூல்கள்** | | |
| 45 | தன்னம்பிக்கை | 2ம் பதிப்பு | 0—8 |
| 46 | புக்கர் வாஷிங்டன் | 2ம் ,, | 0—8 |
| | **சிறு பிரசுரங்கள்** | | |
| 47 | தமிழ்நாட்டு விபாகங்கள் | | 0—2 |
| 48 | கதாயி மண்டல் | | 0—2 |
| 49 | வினோபாஜியின் ஸர்வோதய யாத்திரையும், பூமிதான யக்ஞமும் | | 0—2 |
| 50 | சுயராஜ்யத்தின் உண்மைப் போர் பாகம் I | | 0—3 |
| 51 | ,, ,, பாகம் II | | 0—3 |
| 52 | இதென்ன சுயராஜ்யம்? | | 0—3 |

## *English Publications*

| | | |
|---|---|---|
| 53 | Revolutionary Charkha-Dhirendra Mazumdar | 0—6 |
| 54 | Demand of the Times ,, | 0–12 |
| 55 | New Programme of A. I. S. A., | 0–10 |
| 56 | Prayer for Peace | 0—2 |
| 57 | The Ideology of the Charkha-Gandhiji | 0–14 |

# (A. I. S. A.,) ஸர்வோதய பிரசுரங்கள்

## பத்திரிகை அபிப்பிராயங்கள்

எளிய தமிழில் மொழிபெயர்த்து, அழகிய முறையில் நூல்களை வெளியிட்டுள்ள ஸர்வோதய பிரசுராலயத்தார் பாராட்டுதலுக்குரியவர்கள்........ —"கல்கி"

அரசியல்-காரிருளில் கைகொடுத்து உதவவல்லது காந்தீயம். ஆனால் காங்கிரஸ் அரசியலோ அனுஷ்டானத்தில் காந்தீயத்தை விட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. எனினும் ஸர்வோதயப் பிரசுராலயும் காந்தீயத்தை நினைப்பூட்டிய வண்ணம் தொண்டாற்றி வருகிறது........

மலிவுப் பிரசுரங்களை மனமுவந்து வரவேற்கிறோம்........ —"ஆனந்த விகடன்"

தேச நிர்மாண காரியங்களில் அக்கறையுள்ளோரின் சிந்தனைக்கு உணவு தரும் கருத்துக்கள் அமைந்த புத்தகங்கள்........ —"தினமணி"

கண்ணைக் கவரும் அழகிய பதிப்பு; மனதைக் கவரும் விஷயங்கள்........ —"தினசரி"

படிப்பதற்கு அனுயாசமாக பெரிய எழுத்தில் வெளியிடும் பிரசுராலயத்தாரைப் பாராட்டுகிறோம்........ —"சுதேசமித்திரன்"

மனித மதிப்பும் ஆத்மீக நம்பிக்கையும் சோர்வுற்றிருக்கும் இக்காலத்தில் இந்நூல்கள் வெளியிடப்படுவது பெரிதும் பாராட்டக்கூடியது........ —"நவ இந்தியா"

ஸர்வோதய பிரசுராலயத்தின் பணி போற்றவேண்டிய ஒன்று................ —"ஈழகேசரி"

The Spinners' Association must be congratulated on the diligent manner in which it pursues its task...... "The Hindu"

It is well printed with many illustrations and priced deliberately low...... "Indian Express"

## கதர்-காந்தீய-ஸர்வோதய இலக்கியம்

ஸர்வோதய பிரசுராலயம் (A. I. S. A.,)
இதுவரை 57 புஸ்தகங்களை வெளியிட்டு,
லட்சம் பிரதிகளுக்கு அதிகமாக
விற்பனை செய்துள்ளது.

நேர்த்தியான மலிவான வெளியீடுகள்.
பிரசுர விவரத்திற்கு உள்ளே பார்க்கவும்.

### ★ "கதர் மலர்" ★

மாதப் பத்திரிகை; கதர்த் தத்துவம், காந்தீய-ஸர்வோதயக் கருத்துக்கள் அடங்கியது.

அக்டோபர், 1947-ல் ஆரம்பிக்கப் பெற்றது.

வருட சந்தா: ரூ. 3 தனிப் பிரதி: அணா 4

### ★ "THE KHADI WORLD" ★

A Monthly Digest, devoted to the Science and Philosophy of Khadi, other Constructive Programme and Gandhian — Sarvodaya Ideology.

*Annual Subs: Rs. 3* *Single Copy: Annas 4*

**ஸர்வோதய பிரசுராலயம் (A. I. S. A.,)**
**வீரபாண்டி :: திருப்பூர்**

தந்தி விலாசம்: "Vastralaya"

போன் நிர். 133; திருப்பூர்

சக்தி பவர் பிரஸ், குமரன் வீதி, திருப்பூர்.

107